ஞானகுருவின் படைப்புக்கள்

# அருளாட்சி செயல்விளக்கத் திருவோலைகள்

பதினைந்து ஆண்டுகள் படித்தால்தான் B.A. பட்டமும், பதினேழு ஆண்டுகள் படித்தால்தான் M.A. பட்டமும் கிடைக்கும். உலகியல் படிப்புக்கே இவ்வளவு காலம் என்றால்!? அருளுலக படிப்புக்கு ஆயுள் முழுவதும் படிக்க வேண்டாமா?




அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி,
ஞானாச்சாரியார்,
ஞானகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்.
(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில்
கோயில் கொண்டருளுபவர்)



மெய்யான இந்துமத ஆண்டு 43,73,123 கார்த்திகை மாதம்

இந்து இலக்கியக் கழக வெளியீடு

# உள்ளுறை

1. "**அருளாட்சி செயல்விளக்கத் திருவோலை**" - அனைத்து அடியான்களுக்கும் குருதேவர் 1989 சூன் மாதத்தில் விடுத்த விளக்கத் திருவோலை.
2. "**நிர்வாகக் குழு பொறுப்பேற்பு உறுதிமொழித் திருவோலை**" - இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் பொறுப்பேற்கும் போது குருபாரம்பரிய மரபுப்படி எடுத்துக் கொள்ள வேண்டிய உறுதிமொழியைத் தரும் திருவோலை.
3. "**அருளாட்சி அமைப்புப் பணியில் புதிய திட்டங்கள்**" - இந்து மறுமலர்ச்சி இயக்கம், அருட்பணி விரிவாக்கத் திட்டம் ஆகியவற்றின் உறுப்பினர்களோடு; இந்த இயக்கங்களை அறிந்த, புரிந்த அனைவரும் அன்றாடம் பின்பற்ற வேண்டிய பூசைமுறைகளை விளக்கிடும் திருவோலை.
4. "**அருளுலக படிப்புக்கு ஆயுள் முழுதும் படிக்க வேண்டும்!**" - புதிய ஆர்வலர் ஒருவருக்கு குருதேவர் விடுத்த அஞ்சல்.
5. "**அன்புக்கு அடிமையாகாதார் யார்?! ...**" - விரகாலூர் சித்தரடியாளுக்கு குருதேவர் விடுத்த தன்னிலை விளக்க அஞ்சல்.
6. "**இந்துமத மறுமலர்ச்சிக்காகப் பாடுபடுங்கள்!**" - விரகாலூர் சித்தரடியானுக்கு குருதேவர் விடுத்த செயல் விளக்கத் திருவோலை.

ஓம்

தலைமைப்பீடம்,
4-6-89.

# அருளாட்சி செயல் விளக்கத் திருவோலை

1) அனைத்து வட்டாரங்களுக்கும், வட்டாரச் செயல்வீரர்களுக்கும்; மற்ற குறிப்பிடத் தக்க அ.வி.தி. பணி ஆர்வலர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும்; இ.ம.இ.யை முன் நின்று ஆங்காங்கே வழிநடத்தும் இயக்கச் செயல்வீரர்களுக்கும்; ... மற்ற சித்தர் நெறி தொடர்பாளர்களுக்கும் **ஏற்கனவே பலமுறை வழங்கப்பட்ட செயல்விளக்கச் சுருக்க விளக்கம்**.

2) பேரன்புக்கும், பேரார்வத்துக்குமுரிய சித்தர் நெறிச் செல்வர்களே! பலமுறை மிகமிகத் தெளிவாக அறிவிக்கப்பட்ட ஒரு கருத்தை முன்னணிச் செயல்வீரர்களுள் ஒருவரான திரு சுடலைச் சன்னிதானம் பெரி. முத்தையா அவர்களே அண்மையில் மறந்தும், துறந்தும் செயல்பட ஆரம்பிக்கிறார். இவரைப் போலவே பலர் ஏற்கனவே மறந்தும், துறந்தும் செயல்பட்டிருக்கிறார்கள். எனவேதான், இனிமேலாவது யாருமே அந்தத் தவறை செய்யக் கூடாது என்பதற்கு இந்தச் செயல்விளக்கத் திருவோலை எழுதப்படுகிறது.

3) எதிர்பாராமல் சாபக்கேடாகவோ என்னவோ தெரியவில்லை; "... குருபாரம்பரிய மரபுப்படி எந்தப் பீடாதிபதியும் யார் மேலும் அருவமாக வந்து சேர்வதில்லை; கனவிலோ அல்லது காட்சியிலோ தோன்றி செய்திகளையோ அல்லது கருத்துக்களையோ கூறுவதில்லை. மேலும், குறிப்பாக பத்தாவது, பதினோராவது, பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதிகள் யாருடைய உயிரையும் பிரித்துச்

செல்வதில்லை. யாரையும் அருவமாக அண்டங்களுக்கோ, மலைமுகடுகளுக்கோ, காடுகளுக்கோ, குகைகளுக்கோ அல்லது வேறு எந்த இடங்களுக்கோ அழைத்துச் செல்வதில்லை.

அதுமட்டுமல்ல, அந்தந்த காலங்களில் வாழுகின்ற பீடாதிபதிகளின் சொந்த நேரடியான அருளாணைகளுக்கும், உலகியல் முடிவுகளுக்கும் ஏற்பத்தான் எந்த அடியானுக்கோ அல்லது அடியாளுக்கோ நேரிலேயே இட்டும் தொட்டும் சுட்டியும் அருள் வழங்கப்படும். இதுதான் மரபு. இதுதான் சட்டம்...” - எனவே, **யாராவது இன்றுள்ள பீடாதிபதியையோ அல்லது மற்ற பீடாதிபதியையோ கனவிலோ, காட்சியிலோ காண நேரிட்டால் அல்லது உணர நேரிட்டால் உடனே தலைமைப்பீடத்திற்கு அதனை எழுதி அதற்குரிய விளக்கத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும்**. அப்படி அல்லாமல், அவரவர் தங்கள் தங்கள் விருப்பப்படி கண்ட காட்சியையும், கனவையும், மனதில் தோன்றிய உணர்ச்சியையும் மெய்யாகவே நடந்திட்ட நிகழ்ச்சிகள் போல வெளியில் கூறித் திரிவது **போலியான வாழ்க்கையைத்** தரும்; கேலிக்குரியதாகும்; சித்தர் நெறியையே அவமதித்துப் பாழ்படுத்துவதாகும்.

4) அண்மையில் நம்மிடையே சிலர் **தங்களை மட்டும் தாத்தாவோ, அல்லது குருதேவரோ தனித்துப் பிரித்து அழைத்துச் சென்றதாகவும்; தங்களுக்கென சிறப்புப் பயிற்சிகளையும், செய்திகளையும் வழங்கியதாகவும்**; தங்களை குறிப்பிட்ட சில இடங்களுக்கு அழைத்துச் சென்று அருளுலகத்திற்காகத் தயாரித்ததாகவும் கற்பனையாகக் கூறுவது மிகவும் **வருந்தத் தக்கது**. எனவே, யாரிடமும் இப்படிப்பட்ட போக்கு இருக்கக் கூடாது, இருக்கக் கூடாது, இருக்கக் கூடாது, இருக்கவே கூடாது.

5) குருபாரம்பரிய மரபுப்படி சித்தர் நெறிச் செல்வர்கள் கூடுமானவரை எல்லோருமே அடிக்கடி கூடிப் பழகி, சிந்தித்து, விவாதித்து, முடிவெடுத்து ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும்

என்ற நடைமுறைதான் இதுவரை வற்புறுத்தப்பட்டு இருக்கிறது. இப்பொழுது ஒருசிலர் தங்களை மட்டுமே பீடாதிபதிகள் தேர்ந்தெடுத்து அ.வி.தி. பணியாற்றவும், இ.ம.இ.யைத் தலைமை தாங்கி ஆங்காங்கே வழிநடத்தவும், தனித்துச் செயல்பட சொல்லியிருப்பதாகத் தவறாகக் கூறுகிறார்கள். இது தவறு, தவறு, தவறு. **குருதேவர் என்ற நிலையில்**; "பீடாதிபதி எல்லோருடைய உயிருள்ளும் இருந்து செயல்படுத்துகிறார். அதாவது எல்லோருமே அருளுலகில் சமமாகவே செயல்படுத்தப்படுகிறார்கள். எனவே, யாரும் யாரைவிட பெரியவர்களும் இல்லை, சிறந்தவர்களும் இல்லை, சின்னவர்களும் இல்லை, தாழ்ந்தவர்களும் இல்லை. இதுதான் உண்மை. எனவே எல்லோரும் குருதேவர் மீது நம்பிக்கையும், பற்றும் வைத்து துணிவோடு செயல்பட வேண்டும்.

6) காணாமல் போன ஆட்டைப் பற்றித்தான் ஆடு மேய்ப்போன் கவலைப்படுவான். சரியாகப் பாடம் படிக்காமல் நிறைய தவறுகள் செய்கின்ற மாணவர்களைப் பற்றித்தான் கவலைப்படுவார் ஆசிரியர். அதுபோல் சித்தர் நெறிச் செல்வர்களுக்கிடையே எவ்வளவோ முறை அறிவுரை கூறியும் கனவுலக வாதிகளாக, கற்பனை வாதிகளாக, குருவாணைகளை மறந்து திரிபவர்களாக, போட்டி பொறாமை மிகுந்தவர்களாக, தலைமைப்பீடத்தைக் கலக்காமல் தான்தோன்றித்தனமாக செயல்படுபவர்களாக, குருவை மறுத்தும் மறந்தும் ஒதுக்கியும் பதுக்கியும் செயல்படுபவர்களாக, ... இருப்பவர்கள் பலர் நம்மிடையே தோன்றி விட்டார்கள். எனவே, இப்படிப்பட்டவர்கள் எல்லாம் உடனடியாக முழுமையாகத் திருந்த வேண்டும், திருந்த வேண்டும், திருந்த வேண்டும்.

7) அன்பு கூர்ந்து அந்தந்த வட்டாரத்தவர்கள் அச்சமோ, கூச்சமோ, மயக்கமோ, தயக்கமோ இன்றி அந்தந்த வட்டாரத்தில் மேற்படித் தவறான நோக்குகளில் செயல்படுபவர்களை உடனடியாகக்

கண்டித்தாக வேண்டும். அவர்களைப் பற்றிய செய்திகளைத் தலைமைப் பீடத்திற்குத் தெரிவித்தாக வேண்டும்.

8) **குறிப்பு:-** தலைமைப்பீடத்திலிருந்து எப்பொழுது வேண்டுமானாலும் எப்படிப்பட்ட கண்டிப்பு வேண்டுமானாலும் எந்தத் தனிமனிதருக்கும் வரலாம், அல்லது எந்த வட்டாரத்திற்கும் வரலாம். ஏனென்றால் **கி.மு. 72இலிருந்து இன்று (கி.பி. 1989ஆம் ஆண்டு) வரை 10, 11, 12 என்று மூன்று பதினெண்சித்தர் பீடாதிபதிகள் சுமார் 2061 ஆண்டுகள் முயன்றும் தாழ்த்தப்பட்ட, வீழ்த்தப்பட்ட, அடிமைப்படுத்தப்பட்ட ... தமிழினத்தை, தமிழ்மொழியை, தமிழர் மதத்தை இன்னும் விடுதலை செய்ய முடியவில்லை, விடுதலை செய்ய முடியவில்லை, விடுதலை செய்ய முடியவில்லை.** இதற்கெல்லாம் காரணம் **இவர்களுடைய காலங்களில் தோன்றிய கோழைகளும், ஊசலாட்டக்காரர்களும், தன்னல வெறியர்களும், புகழ் வெறியர்களும், பேராசைக்காரர்களும், தானென்ற அகம்பாவ ஆணவக்காரர்களும், அற்ப சொற்ப சுகங்களுக்காக துரோகங்கள் செய்திடும் துரோகிகளும்தான்.** எனவேதான், **அந்தச் சோக வரலாறு மீண்டும் உருவாகி விடக் கூடாது என்பதற்காகவே இந்தச் செயல்விளக்கத் திருவோலை அனுப்பப்படுகிறது.**

9) எந்தத் தனிமனிதரும் தங்களது சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு இடம் கொடுக்க வேண்டாம். **'தமிழின மொழி மத விடுதலை இயக்கத்தின்'** போர் முரசு தொடர்ந்து கொட்டப்படுவதை யாரும் தங்களது சொந்த கோபதாபங்களால் தடுத்து விட வேண்டாம். எந்த ஒரு தனி நபரும், தங்களுடைய வம்புக்காகவும், வீம்புக்காகவும் நாடெங்கும் பாட ஆரம்பிக்கப்பட்டு விட்ட தமிழ் இன, மத, மொழி விடுதலை இயக்கப் போர்ப் பரணியைத் தளர்ச்சியுறச் செய்துவிட வேண்டாம். எந்த ஒரு தனிமனிதரும் தானென்ற அகம்பாவத்தாலும், ஆணவத்தாலும் நாடு தழுவி பட்டிதொட்டிகளிலும், குக்கிராமங்களிலும், மாநகர்களிலும் அருளை அனுபவப் பொருளாக

வழங்கும் அ.வி.தி. செயல்வீரர்கள் மூலம் அருட்போருக்காகவும், அருளாட்சி அமைப்புக்காகவும் செய்யப்பட்டு வரும் விழிச்சி மிக்க எழிச்சியான தயாரிப்புக்களே சீர்குலைத்து விட வேண்டாம். அதாவது, யார் யாருக்கு தனிப்பட்ட முறையில் இ.ம.இ.யிலோ அல்லது தமிழின மொழி மத விடுதலை இயக்கத்திலோ அல்லது அ.வி.தி.யிலோ அல்லது இவற்றைச் சேர்ந்த 48 நிறுவன நிருவாகங்களிலோ வருத்தமோ, கோபமோ, பகையோ, செயல்பட விரும்பாமையோ இருந்தால், ... இருந்தால், ... இருந்தால் அவர்கள் அன்புகூர்ந்து அமைதியோடும், பொறுமையோடும் விலகி ஒதுங்கி இருந்தால் நல்லது, விலகி ஒதுங்கி இருந்தால் நல்லது, விலகி ஒதுங்கி இருந்தால் நல்லது. ஏனெனில்,

> "நல்லது செய்ய ஆற்றீராயினும்
> அல்லது செய்யாமை ஓம்புமின்"

என்பதே ஆன்றோர் வாக்கு. அதாவது, 'உன்னால் நல்லது செய்ய முடியாவிட்டாலும், தீமையாவது செய்யாமல் இரு' என்பது அறிவுரை. இப்படி மூன்று பீடாதிபதிகளுமே பலமுறை வேண்டுகோள் விடுத்தும் கூட தங்கள் காலத்து மக்கள் ஒத்துழைக்காமல் போனதால்தான் இன்னும் தமிழர்களின் அறியாமை இருளுக்கு விடிவு கிடைக்க வில்லை; தமிழர்களின் வறுமைத் துயர்களுக்கும், அடிமைத் துன்பங்களுக்கும் முடிவு கிடைக்கவில்லை.

இவற்றை உணர்ந்தாவது இக்காலத்தில் வாழும் சித்தர் நெறிச் செல்வர்களில் தனிமனிதப் புகழை விரும்புவோர்களும், பேராசை கொண்டவர்களும், பதவி ஆசை கொண்டவர்களும், போட்டி பொறாமை மிக்கவர்களும், அகம்பாவ ஆணவப் போக்கு மிக்கவர்களும் தங்களுடைய பெற்ற தாயையும், பிறந்த பொன்னாட்டையும், தங்களுக்கு அனைத்தையும் கற்பிக்கும் தாய்மொழியையும் எண்ணியாவது அவற்றின் நன்மைக்காக சித்தர் நெறியைச் சேர்ந்த அனைத்து இயக்கங்களும் சிறப்பாக வளர

வழி விட்டுவிட்டு விலகி ஒதுங்கிக் கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்படுகிறது.

10) இம்மண்ணுலகிலேயே மூத்த இனமாகவும், முதல் மொழியை உடைய இனமாகவும், மூலக் கருவான தத்துவ மதத்தை உடைய இனமாகவும், மிகப் பழமையான பண்பட்ட நெடிய பெரிய வரலாற்றுப் புகழினை உடைய இனமாகவும் உடைய தமிழினம் உலக அளவில் யாராலுமே அடையாளம் கண்டுகொள்ள முடியாத அளவிற்கு அற்பமான மதிப்பைப் பெற்றிருப்பதற்குக் காரணமே தமிழர்களின் ஒற்றுமையின்மையே. அதற்குக் காரணம், தமிழர்களின் இனப் பற்றின்மையும், மொழிப் பற்றின்மையுமே. அதற்குக் காரணம் தமிழர்களுக்குத் தங்களுடைய மதத்தைப் பற்றிய முறையான வரலாற்று அறிவும், நிறைவான இலக்கிய அறிவும், ஆழமான தத்துவ அறிவும், சிறந்த வலிமைமிக்க செயல்சித்தாந்த அறிவும் இல்லாமல் போனதுதான். எனவேதான், **மதவழிப் புரட்சிக்கு, மதவழி மறுமலர்ச்சிப் பணிக்கு = மதவழிச் சீர்திருத்தப் பணிக்கு = மதவழி அருளாட்சிப் பணிக்கு** முயலும் பதினெண்சித்தர்களின் இந்து மறுமலர்ச்சி இயக்கத்திற்கும், தமிழின மொழி மத விடுதலை இயக்கத்திற்கும், அருட்பணி விரிவாக்கத் திட்டத்திற்கும், இவற்றைச் சார்ந்த 48 வகையான நிறுவன நிருவாகங்களுக்கும் தமிழர்களிடையே அறிவுப் பூர்வமான, அதிகாரப் பூர்வமான, ஆர்வமிக்க ஆதரவைத் திரட்டிடும் பணி; படித்தவர், படியாதவர், பாமரர், பணக்காரர், ஆண், பெண், பெரியவர், இளைஞர் என்ற வேறுபாடின்றி அனைவராலும் திரட்டப்படுகின்றது, திரட்டப்படுகின்றது, திரட்டப்படுகின்றது.

பேரன்புகூர்ந்து, தமிழ்க் குடிப் பெருமக்களே! என் தாய்த் திருநாட்டு மக்களே! என் தாயகத்துச் செல்வங்களே! ... யானை நீராடி விட்டுத் தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொள்வது போல் செயல்பட்டு விடாதீர்கள், செயல்பட்டு விடாதீர்கள்,

செயல்பட்டு விடாதீர்கள். அன்புகூர்ந்து இனப்பற்றோடும், மொழிப்பற்றோடும், மதப்பற்றோடும், தன்னம்பிக்கையோடும் தன்மான உரிமைப் போருக்கு, தமிழின விடுதலைப் போருக்கு, தமிழ்மொழியின் விடுதலைப் போருக்கு, தமிழர் மதமான இந்துமதத்தின் விடுதலைப் போருக்கு அணி திரண்டு வாரீர்! அணி திரண்டு வாரீர்!! அணி திரண்டு வாரீர்!!! அல்லது அணி திரட்டித் தாரீர்! அணி திரட்டித் தாரீர்!! அணி திரட்டித் தாரீர்!!!

11) நான்கு உகங்களாக வளமோடும், வலிவோடும் வாழ்ந்து வளர்ந்தோங்கி வரும் வண்டமிழர் வரலாறு காலக் கணக்கீட்டு அடிப்படையில் மிகத் தெளிவாக விரைவில் பதினெண்சித்தர்கள் வழங்கும் அதே வடிவில் உலகம் முழுவதும் அறியும் வண்ணம் பல்வேறு மொழிகளில் அச்சிடப்பட்டாக வேண்டும். பதினெண்சித்தர்களின் எழுத்துக் குவியல்களால் உலக அளவில் சமய வரலாறு, சமூக வரலாறு, அரசியல் வரலாறு, இலக்கிய வரலாறு முதலியவைகள் மிக நுணுக்கமாகத் தெளிவாக்கப்படும் பேருண்மை இதுகாறும் இருட்டடிப்புச் செய்யப்பட்டு இருக்கிறது. இதற்குக் காரணமே தமிழர்களுக்கென, தமிழர்களுக்குள்ளிருந்து ஒரு தலைவன் நிலையாகத் தோன்றி நீடித்துச் செயல்பட முடியாததுதான். அந்த அவலத்தை அகற்றும் பணிதான் கி.மு. 72 முதல் இன்று (கி.பி. 1989ஆம் ஆண்டு) வரை சுமார் 2061 ஆண்டுகள் தொடர்ந்து மூன்று பீடாதிபதிகளாலும் நிகழ்த்தப்பட்டு வருகின்றது.

எனவே, அன்புகூர்ந்து நமது சித்தர் நெறி இயக்கத்தைச் சேர்ந்தவர்களாவது கட்டுப்பாட்டுடனும், ஒற்றுமையுடனும், பற்றுடனும், ஒருமைப்பாட்டுடனும் ஒரே தலைமையின் கீழ் செயல்படக் கற்றுக் கொள்ளவேண்டும்! கற்றுக் கொள்ளவேண்டும்!! கற்றுக் கொள்ளவேண்டும்!!! அப்பொழுதுதான், **சித்தர் நெறி எனப்படும் சீவநெறியான இந்து மதத்தைத்** தலைமையாக, வழிகாட்டியாக, வழித்துணையாகக் கொண்டு தமிழ் மொழி, தமிழ் இனம், தமிழர்

மதம் விடுதலையை அடைய முடியும். அதாவது எந்த ஒரு தனிமனிதனுலும் தனித்து நின்று வழிகாட்டி அல்லது தலைமை தாங்கி தமிழின மொழி மத விடுதலையைப் பெற்றுத் தரமுடியாது, தரமுடியாது, தரமுடியாது, தரவே முடியாது.

எனவேதான், வாழையடி வாழையாகத் தமிழினத்திற்கு தலைமைதாங்கியும், வழி காட்டியும், வழித் துணையாகியும் தன்னிகரில்லாச் சேவை புரிந்து வரும் சித்தர் நெறி என்னும் தத்துவத்தின் மூலம்தான் தமிழின மொழி மத விடுதலை இயக்கம் அமைந்திட முடியும் என்ற கருத்து மிகத் தெளிவாக விளக்கப்பட்டு வருகிறது.

12) இந்தச் சித்தர் நெறி எனும் சீவநெறியான இந்து மதத்திற்குத் தந்தையாகவும், தலைவராகவும், வழிகாட்டியாகவும், துணைவராகவும், தத்துவ நாயகமாகவும், செயலுக்குரிய அருளாட்சி நாயகமாகவும் விளங்குபவர்களே பதினெண்சித்தர் பீடாதிபதிகள். இதுவரை தோன்றிட்ட பதினேரு பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் காலங்களிலும், அவர்களின் காலத்தை ஒட்டிய காலங்களிலும்தான் தமிழின மொழி மத விடுதலைகள் மலர்ந்திருக்கின்றன. ஆனுல், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி காலத்தில் உருவாகப் போகின்ற தமிழின மொழி மத விடுதலைகள்தான் பன்னெடுங் காலத்திற்கு நிலைத்து நிற்கப் போகின்றன! நிலைத்து நிற்கப் போகின்றன! நிலைத்து நிற்கப் போகின்றன! அதற்காகத்தான் ஐம்புலன்களோடு வாழும் பதினெண்சித்தர் பீடாதிபதிகள் எல்லோருமே அருளாட்சி அமைப்புப் பணியில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர்.

இவற்றிற்கு எல்லாம் மேலாக, நமது பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதிதான் அரசயோகியாக, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானமாக, நிறையக்ஞராக, பரப்பிறம்மமாக, அருட்கொடை வள்ளலாக, இராசிவட்ட நிறைவுடையாராக நேரடியாகவே அண்டபேரண்ட அருட்பேரரசராகப் பொறுப்பேற்று அருளாட்சி அமைப்புப் பணியில் ஈடுபட்டிருக்கிருர். இருந்தும்,

அவர் பலரின் குருவாணை மீறல்களாலும், துரோக விரோதச் செயல்களாலும், ஒதுங்கல் பதுங்கல் போக்குகளாலும், ... தம்முடைய அருளாட்சி அமைப்புப் பணியின் விரைவையும், விரிவையும் மிகமிகக் கட்டுப்படுத்தி நிதானப்படுத்திச் செயலாக்குகிறார். ஒருவேளை இவரும் ‘சட்டி சுட்டது கை விட்டது’ என்பது போல், ‘கடை விரித்தோம் கொள்வாரில்லை’ என்பது போல், ... நிலவறைக்குள்ளோ, நீள் தவத்திலோ, மௌன ஞான மோன வாழ்விலோ ஈடுபட்டு விட்டால் பிறகு தமிழின மொழி மத விடுதலை என்பது அதோ கதிதான், அதோ கதிதான், அதோ கதிதான்...!!!???!!!.... எனவே, நம்மவர்கள் சிந்தித்து முழுமனதோடு ஒத்துழைப்புத் தர வாருங்கள் அல்லது ஒதுங்கிக் கொள்ளுங்கள். குருவின் திருவுளக் குறிப்பறிந்து விடுக்கப்படும் செயல்விளக்கத் திருவோலை.

அன்பு

**பதினெண்சித்தர் மடம்,**

**தலைமைப்பீடம்,**

4-6-89.

**அருளாணை.**

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# நிர்வாகக் குழு பொறுப்பேற்பு உறுதிமொழித் திருவோலை

ஓம்

தலைமைப்பீடம்,
13-5-1989.

அருள்மிகு சேரப் பெருமண்டலத்து மாதண்டநாயகம், அருள்மிகு மருதமலை முருகன் சன்னிதானம் சித்தரடியார் திரு பழ. கோபால் (6/504 திருவள்ளுவர் நகர், சிறுமுகை P.O., கோவை - 641302) அவர்களின் அருட் சமூகத்திற்கு,

ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார், தலைவர், குருதேவர் அவர்களின் திருவுள குருவுள ஒப்புதல் பெற்று குருவாணைப்படி தலைமைப்பீடம் விடுக்கும் மேற்கு மண்டல நிர்வாகக் குழு பொறுப்பேற்பு உறுதிமொழித் திருவோலை மடல்:

1) அனைத்தும் குருவின் செயலே!

2) கடந்த 1-5-89 திங்கள் கிழமை காலை 11:00 மணி முதல் மதியம் 2:30 மணி வரை; சேலம் மாவட்டம் வெள்ளைப் பிள்ளயார் கோயில் வட்டாரத்தில் (மடம் என்ற இடத்தில் அமைந்த அருள்மிகு இருளப்பர் கோயிலில்) நடைபெற்ற மேற்கு மண்டல நிர்வாகக் குழு அமைப்பு சிறப்புக் கூட்டத்திற்கு; குருதேவர் அவர்களால் முழு அநுமதி வழங்கப்பட்டு; அக்கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவினர் பட்டியலில் சில திருத்தங்களோடு முழுமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டு குருவுள, திருவுள ஒப்புதல் வழங்கப்படுகிறது.

3) மேற்கு மண்டலத்தில் நிர்வாகக் குழுவில் பொறுப்பேற்ற அனைத்து நிர்வாகிகளுக்கும் தலைவர் குருதேவர் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் வாழ்த்தையும், பாராட்டையும் இதன்மூலம் தெரியப்படுத்துகின்றார். மேலும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அனைவரிடமும் மாதண்டநாயகம் என்ற முறையில் படித்துக் காட்டி இவ்வஞ்சலைப் போலவே தங்கள் கைப்பட அழகாக நிறுத்தி எழுதி நான்கு பேனா நகல்களிலும்; அல்லது மூன்று பேனா நகல் எடுத்து மூன்றிலும் அவரவர்கள் கையொப்பம் இட்டு; கீழ்க்கண்ட உறுதிமொழிகளை ஏற்க வேண்டும். இதைத் தாங்களே முன்னின்று அனைத்து வட்டாரங்களுக்கும் சென்று பெற்று, விரைந்து தலைமைப்பீடத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுகின்றோம்.

4) "நிர்வாகக் குழுவில் எனக்குக் கொடுக்கப்பட்டுள்ள பொறுப்பை பத்தியோடும், மதிப்போடும், உண்மையோடும், தமிழின மொழி மத விடுதலைக்காக உயிருள்ள வரை செய்வோம் என்று உறுதி கூறுகிறோம். இதில் ஊசிமுனை அளவு கூட தவறு ஏற்படாது.

என்றென்றைக்கும் எக்காரணத்தை முன்னிட்டும் குருதேவரையோ, குருதேவரின் வாரிசையோ, குருதேவரின் ஆணை பெற்று வருகின்ற பதிலிகளையோ மாறியோ, மீறியோ, மறுத்தோ, வெறுத்தோ, பகைத்தோ, ஒதுக்கியோ செயல்பட மாட்டோம்! செயல்பட மாட்டோம்!! செயல்பட மாட்டோம்!!! செயல்படவே மாட்டோம். இது முக்காலமும் சத்தியம்.

நமது குருதேவர், தலைவர், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் அருளாட்சி நாயகமாக, தத்துவ நாயகமாக, அருட்கொடை வள்ளலாக, பரப்பிறம்மமாக, அண்டபேரண்ட அனாதி ஆதிசத்திகள் சன்னிதானமாக, அண்டபேரண்ட அருட்பேரரசராக இருந்துதான்; அருளாட்சி அமைப்புப் பணியில் ஈடுபட்டிருக்கிறார் என்பதை முழுமையாக நம்புகிறோம், ஒப்புக் கொள்கிறோம், ஏற்றுக்

கொள்கிறோம். எனவே, குருதேவரையோ, அவருடைய வாரிசுகளையோ, அவரின் ஆணை பெற்ற பதிலிகளையோ எக்காரணம் பற்றியும் புறக்கணித்தோ, மறந்தோ, துறந்தோ, மறுத்தோ, வெறுத்தோ, எதிர்த்தோ, பகைத்தோ செயல்படவே முற்பட மாட்டோம். இது முக்காலமும் சத்தியம்.

நமது குருதேவர் பாரம்பரிய மரபுப்படி யாரையும் தண்டிப்பதில்லை. ஆனால் கண்டிக்க மட்டுமே செய்வார் என்ற பேருண்மையை நாங்கள் முழுமையாக உணர்ந்தவர்கள் என்பதால் அனாவசியமாக குருதேவருக்காக அச்சப்பட மாட்டோம். குருதேவரை எங்களுடைய அன்புத் தந்தையாக, ஞானத் தந்தையாக ஏற்றுப் பற்றோடும், பாசத்தோடும், நட்போடும், தோழமையோடும், உரிமைமிக்க உறவோடும் பழகுவோமே தவிர; அவரை ஒரு முதலாளி அல்லது சர்வாதிகாரி என்று எண்ணவே மாட்டோம். இது முக்காலமும் சத்தியம்.

நாங்கள் ஏற்கனவே குருபாரம்பரிய மரபுப்படி வழங்கியுள்ள உறுதிமொழிகளை என்றென்றும் காப்பாற்றுவோம். நாங்கள் எங்களுக்குக் கிடைக்கக் கூடிய பத்தி, சத்தி, சித்தி, முத்திகளால் எக்காலத்திலும் பிறருக்குத் தீங்கு செய்ய மாட்டோம்.

அருளாட்சி என்பது அருளுலகத்தவரின் முடிவுப்படி பிறக்கின்ற ஆணைகளின்படி அப்படியே செயல்பட்டால்தான் அமையும் என்பதை உணருகிறோம், நம்புகிறோம், ஒப்புக் கொள்கிறோம். எனவே, எக்காரணம் பற்றியும் அருளாட்சிக்காக வழங்கப்படுகின்ற குருவாணைகளை உடனுக்குடன் நிறைவேற்றுவதில் ஊசிமுனை அளவு கூட தயங்க மாட்டோம். இது முக்காலமும் சத்தியம். அதாவது, அருளாட்சி அமைப்புப் பணியில் எங்களுக்கு என்றென்றைக்குமே எள்முனையளவு கூட தயக்கமோ, மயக்கமோ, கலக்கமோ, அச்சமோ, கூச்சமோ ஏற்படாது, ஏற்படாது, ஏற்படாது, ஏற்படாது, ஏற்படவே ஏற்படாது என்று சத்தியம் செய்து கொள்கிறோம்.

இந்த வாக்குறுதித் திருவோலை, பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர், அண்டபேரண்ட அருட்பேரரசர் அவர்களால் கி.பி. 785 முதல் கி.பி. 1040 வரை தமது அடியான்கள், அடியாள்கள், அடியார்களிடமும் வாங்கப்பட்ட ஒன்றுதான் என்ற வரலாற்றுச் செய்தி அரச பாரம்பரியத்திலும், குரு பாரம்பரியத்திலும் விளக்கப்பட்டிருப்பதை உணருகிறோம், ஒப்புக் கொள்கிறோம், ஏற்றுக் கொள்கிறோம். எனவே, பாரம்பரிய மரபுப்படியே பதினெண்சித்தர் பீடம், மடம், கருகுலத்திற்கும்; அருளாட்சிக்காக இன்றுள்ள பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியிடம் இந்த நிர்வாகக் குழு பொறுப்பேற்பு உறுதிமொழித் திருவோலையை எங்கள் கைப்பட மூன்று அல்லது நான்கு பேறு நகல்கள் எழுதி எங்கள் குடும்பத்தவர்களின் கையொப்பமுடன், எங்கள் வட்டாரத்து இயக்கத்து முதன்மையான சிலரின் சாட்சிக் கையொப்பமுடனும் அனுப்பி வைக்கின்றோம்.

எங்களையும், எங்கள் குடும்பத்தினரையும் எங்களுக்கு பயனளிக்கக் கூடிய, உண்மையுள்ள உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் என்றென்றும் பாதுகாப்புத் தரும்படி குருதேவர் வழியாக தாத்தாக்களையும், ஆத்தாக்களையும், அம்மையப்பன்களையும், மற்ற அருளாளர்களையும், அருளுலகத்தவர்களையும், பொருளுலகத்தவர்களையும் வேண்டிக் கொள்கிறோம்.”

<u>மேற்கு மண்டல நிர்வாகக்குழு அமைப்பு உறுப்பினர்கள்:</u>

I. தலைவர்: இராசிபுரம் திரு T.V.G. இரத்தினம் செட்டியார்

II. இணைத் தலைவர்: சிறுமுகை திரு இர. இராமசாமி

III. துணைத் தலைவர்கள்: 1. இராசிபுரம் திரு வ. பன்னீர்செல்வம், 2. அலவாய்ப்பட்டி சு. கணேச முதலியார்.

IV. செயலாளர்: வேம்படிதாளம் திரு இரா. வெங்கடேசன்,

V. இணைச் செயலாளர்: வெண்ணந்தூர் திரு K. அருணசலம்,

VI. துணைச் செயலாளர்கள்: 1. வெ.பி.கோயில் திரு இரா. கலைச்செல்வன், 2. கடந்தப்பட்டி திரு ச. ஏகாம்பரம்,

VII. பொருளாளர்:- இராசிபுரம் திரு இர. கங்காதரக்குமார்,

VIII. இணைப் பொருளாளர்: வேம்படிதாளம் திரு ப. கோவிந்தராசு,
IX. துணைப் பொருளாளர்: கடந்தப்பட்டி திரு M. தியாகராசன்,
X. கொள்கைபரப்புச் செயலாளர்: வேம்படிதாளம் திரு இல.க. கணேசன்,
XI. இணை கொள்கைபரப்புச் செயலாளர்: ஆலாங்கொம்பு திரு இரா. இராசசேகரன்,
XII. துணை கொள்கைபரப்புச் செயலாளர்: அலவாய்ப்பட்டி திரு S. இராமசாமி, கடந்தபட்டி திரு ச. அண்ணாமலை,
XIII. நிர்வாகக் குழு ஆய்வாளர்: வேம்படிதாளம் திரு சீ. மணி,
XIV. நிர்வாகக் குழு காப்பாளர்: திரு கோ. நடராசன்
XV. மாதண்ட நாயகம்: சிறுமுகை திரு பழ. கோபால்,
... ... எனும் பதினெண்மரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

1) உறுப்பினர் கையொப்பம்:-
2) குடும்பத்தினர் கையொப்பம்:-
3) சாட்சியாளரின் கையொப்பம்:-

இங்ஙனம்,
**பதினெண்சித்தர் பீடத் தலைமைப் பணியாளர்கள்,**
சென்னை-11.

***குருமகாசன்னிதானம்,***
***ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்,***
***13-5-89.***

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: வேம்படிதாளம் சித்தரடியார் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது. இதன் இறுதியில் குருதேவரின் கையொப்பம் இருந்தது.//**

# அருளாட்சி அமைப்புப் பணியில் புதிய திட்டங்கள்.

## நிர்வாகக் குழுவினர் அனைவருக்கும் அறிவித்துச் செயலாக்க வேண்டியது.

1) அண்டபேரண்ட அருட்பேரரசர் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களின் **அருளாணை**.

2) இன்றைக்கு குவலய குருபீடமாக, குருதேவராக, அருட்கொடை வள்ளலாக, தத்துவ நாயகமாக, கருவறை மூலவர்களின் அம்மையப்பராக, பரப்பிறம்மமாக இருக்கும் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் அருளாட்சி அமைப்புப் பணியை முழுமையாக ஏற்றிருக்கும் தஞ்சைத் தாத்தாவின் அருளாணைகளைப் பொதுமக்களுக்குக் குருவாணைகளாக வழங்கும் பொறுப்பை ஏற்றிருக்கிறார். எனவே, **நமது இயக்கத்தவர்களும், இயக்கத்திற்கு உட்பட்ட 48 வகையான நிறுவன நிருவாக அமைப்புக்களுக்கு உட்பட்டவர்களும்; இவைகளின் ஆதரவாளர்களும், ஏந்தாளர்களும், புரிமுகத்தார்களும், அறிமுகத்தார்களும்; இந்த அருளாணையை**, அதாவது; இன்று (27.6.89) செவ்வாய்க்கிழமை சூன் மாதம் இருபத்தியேழாம் நாள் (இந்துமத ஆண்டு 43,73,090 சுக்கில ஆண்டு ஆடித் திங்கள் 13ஆம் நாள்) **குருவாணையாக வெளிவரும் இந்த அஞ்சலைக் கண்டது முதல் போர்வீரர்கள் போல் விழிப்புடனும், சுறுசுறுப்புடனும், எச்சரிக்கையுடனும் செயல்பட வேண்டும்**.

3) போர் அறிவிக்கப்பட்டு விட்டது. எனவே, இது முதல் நமது காலம் போர் நடக்கும் காலமாக **எச்சரிக்கையுடன்** செலவிடப்படல் வேண்டும். அதாவது, ஒவ்வொருவரும் அன்றாடம் ஒருவேளையாவது தலையோடு நீராடியே (குளிக்க வேண்டும்) ஆகவேண்டும். எல்லோரிடமும் பூசாமொழிப் புத்தகமும், கொள்கை விளக்கப் புத்தகமும் கட்டாயம் இருந்தே ஆக வேண்டும். **அன்றாடம் சிவபுராணத்தை** காலை, மாலை எந்த வேலையாவது செய்து கொண்டு, பயணம் செய்து கொண்டு; வசதியிருந்தால் பூசையறையில் அல்லது தனியிடத்தில் அமர்ந்து கொண்டு **இரண்டு முறை** (காலை ஒருமுறை, மாலை அல்லது இரவு ஒருமுறை) **ஓதியேயாக வேண்டும், பாடியேயாக வேண்டும்**. ஆனால், ஏதோ கடனுக்குப் படிப்பது போல் சிவபுராணத்தின் பொருளை எண்ணிப் பார்க்காமல், உணர்வு ஒன்றுமல், இயந்திரம் போல் வசன நடையில் கடகடவென்று படித்து விடக் கூடாது. எனவே, ஒவ்வொரு சொல்லையும் நிறுத்தி எழுத்து எழுத்தாக ஒவ்வொரு எழுத்தையும் உச்சரித்து ஒலிநயமாக சிவபுராணத்தை இனிய குரலில் நிதானமாக இசை உணர்வோடு பாட வேண்டும்.

**இதன்பிறகு பூசாமொழிப் புத்தகத்தின் முன்னுரையைச் சிறிது படிக்க வேண்டும்**. படித்த இடத்திற்கு அடையாளமாக வேப்பங் கொழுந்தைப் புத்தகத்தில் வைத்து மூடிவைத்து விட வேண்டும். (அதாவது பூசையறையிலோ அல்லது எப்பொழுதும் தன்னுடனே வைத்துக் கொள்ள வேண்டும்). **அதன்பிறகு**, அரச இலை அல்லது ஆல இலை எடுத்து **கொள்கை விளக்கப் புத்தகத்தின்** (ரூ.18 மதிப்புள்ளது) இடையில் அடையாளத்திற்கு வைத்து **அன்றாடம் ஓய்வு கிடைக்கும் போது படித்து வர வேண்டும்**. இதை மெல்லவும் படிக்கலாம், உரக்கவும் படிக்கலாம். இப்படிப் படித்து வரும்போது ஒரு வாரத்திலோ அல்லது பத்து நாட்களுக்குள்ளோ முடிந்து விட்டால் மீண்டும் முதலில் இருந்து படிக்க வேண்டும்.

இதேபோல், பூசாமொழிப் புத்தகத்தின் முன்னுரையையும், பாடல்களையும் படிக்க வேண்டும்.

தங்களால் முடிந்தவரை **<u>அன்றாடம்</u> தூங்கி எழுந்தவுடன் அல்லது இரவு தூங்கப் போகும் முன்;** கை கால் முகம் கழுவி சிறிது தண்ணீர் குடித்து விட்டு நின்று கொண்டோ, முழங்காலிட்டோ, சம்மணம் போட்டு உட்கார்ந்து கொண்டோ, கண்களை மூடி கைகளைக் குவித்து அவரவர்களுக்குத் தெரிந்த குலதெய்வங்கள், கடவுள்கள், அவரவர்க்கு கொடுக்கப்பட்ட அருட்பட்டங்கள், குருதேவரிடம் நேரில் தெரிந்து கொண்ட பூசாமொழி வாசகங்கள், தஞ்சைத் தாத்தாவின் அருட்பட்டங்கள், குருதேவரின் அருட்பட்டங்கள் முதலியவைகளைக் கூறுவதுடன் தங்களுக்குத் தெரிவிக்கப்பட்ட குருபாரம்பரிய உறுதிமொழிகளைக் கூறி **தங்களுக்குத் தேவையான சித்திகளை வேண்டிப் பூசை செய்து கொள்ள வேண்டும்**. இறுதியில் சரணாகதித் தத்துவப்படி தாங்களே மனம் விரும்பித் தங்களையும், தங்கள் உடமைகளையும், உரிமைகளையும் முழுமையாகப் பதினெண்சித்தர் மடம் பீடம் கருகுலம் ஏற்றுப் பாதுகாக்குமாறு **வேண்டிப் பூசைகளை நிறைவு செய்ய வேண்டும்**.

4) அருட்போருக்காக அருட்படை திரட்டவும், திரட்டிய படைவீரர்களுக்குப் பயிற்சி அளிக்கவும், பயிற்சி அளிக்கப்பட்ட படையை அணிவகுத்து அருளாட்சி நாயகம், தஞ்சைத் தாத்தா வழங்கும் வியூகப்படி போர் நடத்தவும் தேவையான வீரத் தளபதிகளைத் தயாரிக்க தஞ்சைத் தாத்தா பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி அருளாணை வழங்கியுள்ளார். அதற்கேற்ப குருதேவர் இன்றைய நிலையில் நம்மிடம் இருப்பவர்களில் ஆர்வமுள்ள அனைவரையுமே இப்பொழுது வீரத் தளபதிகளாகத் தயாரிக்க முடிவு செய்துள்ளார். இதற்கு எந்த வகையான தகுதியோ, தரா தரமோ, உர திறமோ பார்க்கப்படுவதில்லை. அதாவது ஆர்வம் ஒன்று மட்டுமே முழுக்க முழுக்க கருத்தில் கொள்ளப்பட்டு தளபதிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். எனவே, நம்மில்

ஆர்வமுள்ளவர்கள், குருதேவர் மீது நம்பிக்கையுள்ளவர்கள், தங்களுடைய பெயர்களை நேரடியாகத் தலைமைப் பீடத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். மேலும், அந்தந்த நகர, வட்ட, வட்டார, மாவட்ட, மண்டல அலுவலகங்களோடு எல்லாம் இவர்கள் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும். இவர்கள் கீழ்க்கண்டவாறு கட்டாயம் செயல்பட்டாக வேண்டும்.

a) தங்களுக்கு எந்த அஞ்சல் எங்கிருந்து வந்தாலும் அதற்கு ஒரு பேனா நகல் எடுத்து தலைமைப்பீடம் அனுப்ப வேண்டும். விரைந்து 1 + 1 = 2 என்று கார்பன் நகல்கள் தயாரித்து மற்ற மண்டலத் தலைமையகங்களுக்கும், தங்களுடைய மண்டலத் தலைமையகத்திற்கும், தாமறிந்த மண்டலப் பிரமுகர்களுக்கும் அனுப்ப வேண்டும். அதாவது, தங்களைப் பலருக்கும் அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு நகலின் கடைசியிலும், அந்த நகல் யாருக்கு அனுப்பப்படுகிறதோ, அவருக்கு தாம் நகல் அனுப்புவது போல் அவரும் தமக்கு தவறாமல் நகல்கள் அனுப்புமாறு வேண்டுகோள் விடுத்துக் கொள்ள வேண்டும். இதனால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற தளபதிகளுக்குள் நல்ல நட்பும், தோழமையும் உருவாகும்.

b) நம்மவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தளபதிகளாக இருந்தாலும் சரி, மற்றபடி இயக்கத் தொடர்புகளோடு புரிமுகமும் அறிமுகமும் வைத்திருப்பவர்களாக இருந்தாலும் சரி, தங்களுக்கு வரக்கூடிய அஞ்சல்களை உடனுக்குடன் தங்களுடைய வட்டாரத்தில் உள்ள இயக்கத் தொடர்பான அனைவர்க்கும் காட்டி அவர்களின் கையெழுத்தை அஞ்சலுக்குப் பின்னே அல்லது தனித்தாள் ஒட்டி அதிலோ வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும். குருதேவர் சுற்றுப்பயணம் வரும்போது இதைக் கேட்டு வாங்கிப் பரிசோதிப்பார். எனவே, எல்லோருமே தங்களுக்கு வரக்கூடிய அஞ்சல்களைத் தேதி வாரியாகக் கோப்பில் பாதுகாக்க வேண்டும்.

c) ஒவ்வொருவரும் இதுவரை வெளிவந்த எல்லா குருதேவர் அறிக்கைகளேயும் வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும். கூடுமானவரை மாவட்ட நூலகங்களிலோ, மண்டல நூலகங்களிலோ இருக்கக் கூடிய கையெழுத்துப் பிறதி நகல்களின் தொகுப்பை (Binding) படித்துக் குறிப்புக்கள் எழுதி வைத்துக் கொள்ள வேண்டும். இதேபோல் குருதேவர் அறிக்கைகளேயும் படித்துக் குறிப்பு எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

d) அந்தந்த வட்டாரத்தில் நடைபெறக் கூடிய சுடலேப் பூசைகளுக்கும், ஆலய வழிபாடுகளுக்கும், விளக்குப் பூசைகளுக்கும், குருதேவர் நடத்திடும் பயிற்சி முகாம்களுக்கும் தவருமல் சென்று கலந்து கொள்ள வேண்டும்.

e) ஒவ்வொருவரும் அரிதின் முயன்று கூடுமான வரை குருதேவரை தலேமைப்பீடத்திலோ, சுற்றுப்பயணத்திலோ சந்தித்து அவரால் இட்டும் தொட்டும் சுட்டியும் அருளப் பெறல் வேண்டும். அதனுல் அருட்கணிப்புக்களே உணர்வுப் பூர்வமாகவோ, ஞானக்காட்சி மூலமாகவோ தெரிந்து பிறருக்குக் கூறும் ஆற்றலேப் பெற்றுக் கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் தேவைப்படும்போது ஆழ்ந்த தவத்தால் தங்களேக் குருதேவரோடு தொடர்பு படுத்திப் பிறருக்கு அருள்நலம் வழங்க வேண்டும். அதாவது மந்திரிக்க வேண்டும்.

f) அருட்போர்த் தளபதிகளாகத் தயாராகிறவர்கள் பிறருக்கு அருளே அநுபவப் பொருளாக வழங்கும் வல்லமை பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

5) **<u>செயல்திட்டம்</u>**:-

பலர் தாங்கள் வாடகை வீட்டில் இருப்பதால் அல்லது கூட்டுக் குடும்பமாக இருப்பதால் மெய்ஞ்ஞானக் கொடியை தங்கள் வீட்டு வாசலில் ஏற்றிக் கொள்ள முடியவில்லே என்று கூறுகிருர்கள். இப்படிப்பட்டவர்களுக்காக இனிமேல் அவரவர் விருப்பப்படி அந்த

ஊரில் உள்ள ஏதேனும் ஒரு கோயிலிலோ அல்லது பொது இடத்திலோ அல்லது நெடுஞ்சாலைகளின் (Highways) ஓரங்களில் உள்ள மரங்களின் மீதோ மெய்ஞ்ஞானக்கொடியை ஏற்றி கீழே திரிசூலம் நட்டு வாரம் ஒருமுறையாவது அம் மெய்ஞ்ஞானக்கொடிக்கு ஏதேனும் படையலிட்டுப் பூசை செய்யுமாறு புதிய பரிகார முறை தஞ்சைத் தாத்தாவின் அருளாணையால் வழங்கப்படுகிறது. இதைப் புரிந்து விரைவாகவும், விரிவாகவும், முழுமையாகவும் நாடெங்கும் செயலாக்கும் பொறுப்பு ஒவ்வொரு அருட்போர்ப் படைத் தளபதிக்கும் உண்டு! உண்டு! உண்டு! எனவே, இதன்படி இனிமேல் எல்லாவிதமான நோயாளிகளுக்கும், பேயாளிகளுக்கும் பரிகாரப் பூசை செய்யுமாறு பரிந்துரைக் குருவாணை வழங்கப்படுகிறது.

6) தலைமைப்பீடத்திலிருந்து அருளேற்றி அனுப்பப்படும் தாயத்து, முடிகயிறு, சக்கரம், இயந்திரம், இயந்திறம், இயந்தரம், அச்சிடப்பட்ட சிவலிங்கப்படம், மெய்ஞ்ஞானக்கொடி(துணி), ... முதலியவைகளை ஏழை, எளிய, பாட்டாளிப் பாமர மக்களும் வாங்கிப் பயனடையுமாறு செய்ய வேண்டும். அதற்காக சுடலைகளிலும், பொது இடங்களிலும், கோயில்களிலும், இயக்க அலுவலகங்களிலும் அருட்கோட்டங்கள் அமைத்துத் தவறாது வாரபூசைகளைச் செய்து மேற்படி அருளேற்றப் பட்ட பொருள்களை குறைந்த காணிக்கையில் வழங்க வேண்டும். நமது கருத்துக்களை சொற்பொழிவுகளின் மூலம் விளக்க வேண்டும். நமக்கேற்ப நாடகங்கள், வில்லுப் பாட்டுக்கள், இன்னிசைக் குழுக்கள் முதலிய பல அமைப்புக்களை உருவாக்க வேண்டும்.

7) நமது இந்துமதத்தில்தான் கடவுள்கள் மனிதர்களாகவும், மனிதர்கள் கடவுள்களாகவும் தொடர்ந்து மாறி மாறிச் செயல்படும் முறை இருந்து வருகிறது. எனவேதான், நமது கடவுள்களில் பெரும்பாலானவர்கள் மனிதப் பண்பாடுகளுக்கும், நாகரிகங்களுக்கும் ஏற்பவே எளிதில் எல்லோருடனும் கலந்து பழகுகிறார்கள். **தங்களை வேண்டிப் பூசை செய்யும் அனைவருக்கும் எளிதில் அருள் வழங்கி விடுகிறார்கள்**. இதனால்தான், இந்துமதத்தில் சமூக நல

விரோத துரோகச் செயல்களைச் செய்யக்கூடிய கொடிய மந்திரவாதிகள் கூட சத்தியும், சித்தியும் மிகுதியாகப் பெற்ற கடவுள்களின் ஆதரவுகளைப் பெற்றவர்களாக விளங்குகிறார்கள். எனவேதான், அவ்வப்பொழுது தோன்றக் கூடிய சமூக நல வளவளர்ச்சிக்குப் பாடுபட்டிடும் **நல்ல அருளாளர்கள் கூட மேற்படி மந்திரவாதிகளுடன் போராடித் துன்புற நேரிட்டு விடுகிறது. இம்மாபெரும் பேருண்மைதான் நமது இந்துமதத்தின் உயர்வுக்கும், உயிரோட்டமான நிலைத்த வாழ்வுக்கும் அடிப்படையாக அமைகிறது.**

அண்மையில் அருளாட்சி நாயகமாகவும், தத்துவ நாயகமாகவும், நான்குயுக நாயகமாகவும், குவலய குருபீடமாகவும், கருவறை மூலவர்களின் அம்மையப்பராகவும், நிறை யக்ஞராகவும், பரப்பிறம்மமாகவும் விளங்கும் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் ஓர் அருட்கொடை வள்ளலாக இருந்து தம்மிடம் வந்தவர்களையெல்லாம் அருளாளர்களாக உருவாக்கிய காரணத்தால், பேராசையின் காரணமாக குருத் துரோகியாகவும் விரோதியாகவும் மாறி; தேவர்களையும், தேவதைகளையும், தெய்வங்களையும் மந்திரத்தால் கட்டித் தொல்லை கொடுப்பவராகவும்; குருமொழி கேளாமல் மக்களுக்கு பல தீமைகளைச் செய்பவராகவும்; குருவாணைகளை மறுத்தும், எதிர்த்தும் மந்திரவாதியாகச் செயல்படும் தோழர் பெரி. முத்தையா போன்று பலர் உருவாகி இருக்கிறார்கள்.

எனவே, இவர்களால் அருளுலகில் பரவி வரும் இருளை அகற்ற வேண்டும்; இவர்களால் பொதுமக்களுக்கு ஏற்படக் கூடிய இன்னல்களையும், இழப்புக்களையும் தடுத்து அகற்றியாக வேண்டும். அதற்காக நம்மவர்கள் தன்னம்பிக்கையோடும், துணிச்சலோடும், அடிக்கடி தவப் பூசைகளில் ஈடுபட்டும்; சுடலைப் பூசைகளுக்கும் ஆலய வழிபாடுகளுக்கும் மிகுதியாகச் சென்றும் தங்களை வலிமைப்-படுத்திக் கொண்டு முதலில் மந்திரவாதிகளால் கட்டப்பட்டுள்ள தேவர்களையும், தேவதைகளையும், தெய்வங்களையும், அனைத்து

வகையான கருவறைகளேயும் விடுவிக்கும் பணியில் ஈடுபட்டேயாக வேண்டும். இதற்காக எல்லோரும் தலைமைப் பீடத்துடன் அடிக்கடி தொடர்பு கொள்ள வேண்டும். அந்தந்த மண்டல, மாவட்ட, வட்டார, வட்ட அலுவலகங்களோடு தொடர்பு கொள்ள வேண்டும். முழுமூச்சாக சித்தர் நெறியை விளக்கியுரைத்துப் பரப்ப முற்பட வேண்டும்.

8) வருங்காலத்தில் நிகழ்த்தப்பட இருக்கும் மாற்றங்கள் அனைத்தும் அருளுலகத் தத்துவங்களையும், சித்தாந்தங்களையும் அடிப்படையாகக் கொண்டதாகவே இருக்கும். அதற்காக நம்மவர்கள் அருளுலக வரலாறுகள், தத்துவங்கள், சித்தாந்தங்கள், உயிரோட்டமான கொள்கைகள், குறிக்கோள்கள், செயல்பாட்டு முறைகள், ... முதலியவற்றை ஏட்டறிவாகவும், பட்டறிவாகவும் பெற்றேயாக வேண்டும். இதற்காகவாவது நம்மவர்கள் வாரம் ஒருமுறை அல்லது இருமுறை குறைந்தது ஒருமணி நேரமாவது வசதிவாய்ப்புக்களின்படி யார் வீட்டிலாவது சந்தித்துக் கூடிப் பேச வேண்டும். அந்தப் பேச்சுக்களில் குருதேவர் அறிக்கைகள், நமது அச்சிடப்பட்ட புத்தகங்கள் அல்லது தலைமைப்பீடத்திலிருந்து அனுப்பப்பட்ட கட்டுரை நகல்கள், கையெழுத்துப் பிறதிகள், இயக்கத் தொடர்பாக அடிக்கடி குருதேவர் அனுப்பும் அறிவிப்புகள், ஆணைகள் அடிப்படையாக அமைய வேண்டும். <u>அப்பொழுதுதான் நம்மவர்கள் தயாராக முடியும்! தயாராக முடியும்!! தயாராக முடியும்!!!</u>

9) நமது தலைமைப்பீடத்தில் அச்சிட்டு விலைக்கு விற்கப்படாமல் சில இலட்சம் ரூபாய் மதிப்புள்ள புத்தகங்களும், அறிக்கைகளும் அப்படியே இருக்கின்றன. அவற்றையெல்லாம் படிக்கத் தெரிந்த, நமது புத்தகங்களைப் படிப்பதில் ஆர்வமுள்ள திறமையானவர்களாகப் பார்த்து விற்க வேண்டும். பழைய புத்தகக் கடைக்கு விற்பது போல விற்றுவிடக் கூடாது. ஏனெனில் அவற்றையெல்லாம் திரும்ப அச்சடிக்க முடியாது.

10) நம்மவர்கள் அவரவர் வட்டாரங்களில் நடக்கக் கூடிய ஒவ்வொருவர் இல்லத்துத் திருவிழாக்களிலும் நமது கொள்கை விளக்கச் சொற்பொழிவுகளை நிகழ்த்துதல் வேண்டும். அந்தந்த வட்டாரத்தில் உள்ள சிறிய பெரிய கோயில்கள் அனைத்தையுமே நமது இயக்கக் கூட்டங்களும், விவாதங்களும், சொற்பொழிவுகளும் நடைபெறும் மன்றங்களாக ஆக்கிடல் வேண்டும். இதற்காக, அன்றாடம் அவரவர் வட்டாரங்களில் உள்ள கோயில்களில் நம்மவர்களில் ஆளுக்கொருவர் அன்றாடம் செல்லுவது என்று முறை வைத்துக் கொண்டு கோயில் பூசையின் போது சிவபுராணம், காயந்திரி மந்தர மந்திர மந்திறங்கள் முதலியவற்றை வாய்விட்டு உரக்க இனிய குரலில் ஓதிப் பார்க்க வேண்டும். அதனால் பொதுமக்களின் தொடர்பும், கருவறை மூலவர்களின் புத்துயிர்ப்புப் பணியும் ஒருசேர ஒரே சமயத்தில் நடைபெறும். இதனை நம்மவர்கள் நன்கு திட்டமிட்டு முறைப்படி தொடர்ந்து நிறைவேற்ற வேண்டும்.

11) இவை பற்றிய எல்லோருடைய கருத்துரைகளையும் தலைமைப்பீடம் எதிர்பார்க்கின்றது. இன்னும் ஏதேனும் செயல்திட்டங்கள் இருந்தால் தெரிவிக்குமாறு வேண்டப்படுகிறார்கள். இதனை நகலெடுத்து அனைவருக்கும் தாருங்கள். **குருவாணை**.

(ஒப்பம்)

**குருதேவர், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: சித்தரடியான் திரு இரா.சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# அருளுலக படிப்புக்கு ஆயுள் முழுவதும் படிக்க வேண்டும்!

ஓம்

தலைமைப்பீடம்,
3-6-89.

அருள்மிகு சித்தரடியான் திரு மு. பாண்டி (குலசேகரநல்லூர், இராமசாமி நகர் P.O., அருப்புக்கோட்டை) அவர்கள் சமூகத்திற்கு

ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறர் ஆணைப்படி விடுக்கும் அஞ்சல்.

1) அனைத்தும் குருவின் செயலே! தாத்தாக்கள் ஆத்தாக்கள் அம்மையப்பன்களின் திருவருளே!

2) தங்களின் 30-5-1989ஆம் தேதியிட்ட உள்நாட்டஞ்சல் கிடைத்தது. குருதேவருக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு, அவர் கூறிய பதிலை இங்கு குறிப்பிடுகின்றோம்.

3) தாங்கள் அனுப்பியிருந்த மூன்று அருட்கணிப்பில் இரண்டு அருட்கணிப்பு கணித்து அனுப்பப்பட்டுள்ளது. திரு இரத்தினசாமி (2-26-37, மேட்டுத் தெரு, வேலாயுதபுரம், அருப்புக்கோட்டை) அவரது அருட்கணிப்பு மிகவும் சிக்கலாக இருப்பதால்; பூசையில் வைக்கப்பட்டுள்ளது. உத்தரவு கிடைத்ததும் உடனே அனுப்பி வைக்கப்படும். கவலைப்பட வேண்டாம்.

4) தாங்கள் ஆர்வமுடன் எழுதிய அஞ்சலுக்கு குருதேவர் பாராட்டுத் தெரிவிக்கின்றார். தங்களின் பரிந்துரையையும், ஊர்

மக்களின் வேண்டுகோளையும் ஏற்று; **திரு கோபால்ராசு அவர்கள் தலைமைப்பீடத்திலிருந்து மன்னிக்கப்படுகிறார்**. இனிமேலாவது அவருக்கு ஏற்படும் ஐயங்களை, சந்தேகங்களை நேரடியாகத் தலைமைப்பீடத்திற்குத் தொடர்பு கொண்டு விளக்கம் பெறும்படி அறிவுரை கூறுங்கள்.

5) தங்களின் அஞ்சலில் 5, 6 பாராவில் குறிப்பிட்டுள்ளபடி; தங்களுடைய வேண்டுகோளையும், ஊரார்களின் வேண்டுகோளையும் ஏற்று அருள்மிகு அகத்தியர் சன்னிதானம் திரு மு. இராமானுசதாசு அவர்கள் தொடர்ந்து வாராவாரம் தங்கள் அருட்கோட்டத்திற்கு வந்து செயல்பட்டிட இவ்வஞ்சல் மூலம் ஒப்புதல் வழங்கப்படுகிறது. **அதற்கு இந்த அஞ்சலே குருவாணைத் திருவோலை ஆகும்**. எனவே, இவ்வஞ்சலை Xerox Copy எடுத்து அவருக்கு அனுப்பி வைத்து அவரை வரச் சொல்லலாம். தலைமைப்பீடத்திலிருந்தும் செய்தி அறிவிக்கப்படும்.

6) உங்கள் ஊரில் எந்த தனிமனிதர் வேண்டுமானாலும் சித்தி பெற்று, அருட்கணிப்பு, அருள்வாக்கு, ஞானக்காட்சி கூறலாம்.

**குறிப்பு**:-

**a)** அன்றாடம் 2½ மணி நேரம் (ஒரு சாமம்) பூசையில் அமர்ந்து, நமது பூசாமொழி புத்தகம் வைத்து அதிலுள்ள பூசா வாசகங்களை முழுவதுமாக ஓத வேண்டும். சித்திக் கலசம் வைத்துப் பூசை செய்ய வேண்டும்.

b) அப்படி பூசையில் அமரும்போது (சிவப்பு நிற 4 முழ வேட்டி, 6 முழம் இடுப்புக் கச்சை, 12 முழம் தலைப்பாகை) சன்னிதான உடையணிந்து கொண்டும், இடது கையில் 6 அடி உயரமுள்ள திரிசூலத்தையும், வலது கையில் மெய்ஞ்ஞானக்கொடியையும், மயில்பீலியையும் வைத்திருக்க வேண்டும். (மெய்ஞ்ஞானக்கொடியை தலைமைப்பீடம் வந்து செல்லும் நிர்வாகக் குழுவிடம் கூறி பெற்றுக் கொள்ளலாம்.)

c) குருதேவருக்குப் பதிலாக வாரம் ஒருமுறை மதுரை தத்தனேரி சுடலை சென்று நிர்வாகக் குழுவினரிடம் வாழ்த்துப் பெற்று, கலசத்தை சிங்காரித்து, மந்திரித்து எடுத்து வர வேண்டும். இந்த முயற்சி தொடர்ந்து 48 வாரம் செய்ய வேண்டும். இந்த முயற்சியில் அவரவர் ஆழ்ந்த பத்திக்கு ஏற்ப இடையிடையே சித்தி கிடைக்கலாம்.

d) பதினைந்து ஆண்டுகள் படித்தால்தான் B.A. பட்டமும், பதினேழு ஆண்டுகள் படித்தால்தான் M.A. பட்டமும் கிடைக்கும். உலகியல் படிப்புக்கே இவ்வளவு காலம் என்றால்!? அருளுலக படிப்புக்கு ஆயுள் முழுவதும் படிக்க வேண்டாமா? திடீரென வந்து விடுமா? சாதிமத வேறுபாடோ, ஏழை பணக்காரன் என்ற வேறுபாடோ சித்தி பெறுவதற்கு இல்லை. முயலுக.

உடன் பதில்.

**அன்பு**
**தலைமைப்பீட எழுத்தர்,**
**தலைமைப்பீடம்,**
3-6-89.

**முகவரி:-**

சித்தர் கருவூரர்,
13, குமாரசாமி முதலித் தெரு,
வரதராசபுரம், அம்பத்தூர், சென்னை-600053.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

ஓம்

11-7-89,

பதினெண்சித்தர் மடம், பீடம், கருகுலம்,

தலைமைப்பீட அலுவலகம்.

# அன்புக்கு அடிமையாகாதார் யார்?! ...

அருள்மிகு சமயபுரம் மாரியம்மன் சன்னிதானம் சித்தரடியாள் கி. சமுத்திரவள்ளி நாச்சியார் அவர்கள் சமூகத்துக்கு விடுத்துக் கொள்ளும் கருத்து விளக்கத் திருவோலை.

1) தாங்கள் ஞானாச்சாரியார், தமிழினக் குருபீடம், இந்துமதத் தந்தை, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் செ<u>ல்ல</u> மகள், செ<u>ல்வ</u> மகள், ஏற்புச் செல்வி ஆவீர்கள். இப் பேருண்மைகளை எந்த நொடியிலும் மறக்கக் கூடாது! துறக்கக் கூடாது! உங்களை முழுமையாக நம்பித்தான் மாபெரும் பொறுப்புக்கள் உங்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன. குருதேவரிடம் வாய்மொழியாகத் தெரிந்து கொள்பவைகள்; பயிற்சிகளாகப் பெறுபவைகள் ... முதலிய அனைத்துமே தங்கள் இதயம் எனும் இரும்புப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டப்பட்டவையாகத்தான் இருக்க வேண்டும்.

2) குருதேவர் ஏறத்தாழ எந்த நேரத்திலும் எரிமலைகளுக்குள் புகுந்து வெளி வந்து கொண்டிருப்பார்; நெருப்பாற்றில் நீந்துவார்; தோல்விகள், தொல்லைகள், அச்சுறுத்தல்கள், ஏமாற்றங்கள், எதிரிகள் என்ற காட்டாற்று வெள்ளப் போக்கை நீந்திக் கடந்து கொண்டு இருப்பார்; துரோகிகளும், விரோதிகளும் விடுக்கின்ற நச்சுக் கத்திகளையும், அம்புகளையும், துப்பாக்கித் தோட்டாக்களையும் சர்வ

சாதாரணமாகச் சந்தித்துக் கொண்டேதான் இருப்பார்; சோதனைகளையும், வேதனைகளையும் பொருட்படுத்தாமல் சாதனைகளைச் சாதித்தபடியே அருட்பயணங்களைச் செய்தபடியே இருப்பார்.

இவற்றிற்கெல்லாம் மேலாக, அவருக்குப் போதிய உறக்கமில்லை. அவர் விரும்பும் பக்குவத்தில் தேவையான உணவு கிடைப்பதில்லை. உடல் நலப் பாதிப்புக்கேற்ற ஓய்வும் இல்லை. மருத்துவர்களோ சர்க்கரை நோய் பற்றி அச்சுறுத்திக் கொண்டுள்ளார்கள். பொருளாதாரப் பற்றுக்குறையோ பயமுறுத்திக் கொண்டுள்ளது. குருதேவரிடம் எதை எதையோ எதிர்பார்த்து ஏமாந்தவர்களெல்லாம் குருதேவரின் மீது கறைகளையும், குறைகளையும் கூறி வருகிறுர்கள். இவற்றிற்கு ஊடேதான் நீ பார்த்து வியந்து ஆச்சரியப்பட்டு; **அவருடைய கலகலப்பான பேச்சாலும், அன்பு ஊற்றெடுக்கும் கனிவு நிறைந்த சொற்களாலும், ஆர்ப்பாட்டமிக்கச் சுறுசுறுப்பான செயல்முறைகளாலும், துள்ளல் நடை மிக்கப் புதுவெள்ளம் போன்று வருவோர் அனைவரின் உள்ளத்திலும், சிந்தையிலும் வேகமாகப் புகுந்து செயல்படும் திறத்தாலும் அவரிடம் மிகுந்த அன்பு கொண்டு பெருமிதமும், பற்றும், உரிமையும் காட்டி பாராட்டியமைக்கும் நன்றி!**

உன்னைப் போல் ஆயிரமாயிரம் இளைஞர்களும், முதியவர்களும், சிறுர்களும், இளம் நங்கையர்களும், மூதாட்டிகளும், சிறுமிகளும் குருதேவரின் அன்புக்கு அடிமையாகி அவர் மீது அன்பு வைத்துள்ளார்கள் என்பதே உண்மையாகும். அதாவது, நமது குருதேவருக்காகத் தங்களையே பலியிட்டுக் கொள்ளத் தயாராக இருக்கிறவர்களும்!; எதையும் செய்யத் தயாராக இருப்பவர்களும்!; பனிமூடிய இமயமலை முகடு முதல் அலைகடல் தழுவி விளையாடும் கன்னியாகுமரி முனை வரைக் கணக்கற்றோராக இருப்பதால்தான்; நமது குருதேவர் கையில் ஆயுதம் ஏதுமின்றித் தத்துவ நாயகமாக, தமிழின மொழி மத விடுதலை இயக்கத்துக்காகவும், இந்து மறுமலர்ச்சி

இயக்கத்துக்காகவும் இரவுபகலாகச் சுற்றுப்பயணம் செய்கிறுர். இதைப் புரிந்து உன் போன்ருேர் செயல்பட வேண்டும்.

**அன்பு**
**தலைமைப்பீடம்,**
11-7-89.

அன்பு மகளே!

நிலவு கால இரவுகளிலும், கீழ் வானம் வெளுக்கின்ற நேரங்களிலும் மக்கள் விழித்துக் கொண்டிருப்பார்கள் என்ற நம்பிக்கையில் நீலவானில் சிறகடித்து மானுடர்களை மகிழ்விக்க வாய்விட்டுப் பாடிச் செல்லும் வானம்பாடி போல்; என் தாய் நாட்டு மக்களுக்காக அவர்கள் விழித்திருக்கும் நேரத்தை ஆராய்ந்து இரவு பகலாக அறிவுரைகளைக் கூறித் திரியும் எமக்குக் கூடும் தேவையில்லை! வீடும் தேவையில்லை! வேட்டை தேடிப் புறப்பட்டிருக்கும் காட்டு வேங்கை யாம். எமக்கு விருந்தோ, ஓய்வோ, கேளிக்கையோ தேவைப்படாது! பயன்படாது! எமது இன மொழி மத விடுதலையே எமது உயிர் மூச்சு. இதைப் புரிந்தும் புரியவைத்தும், உணர்ந்தும் உணர்த்தியும் செயல்படு! செயல்படுத்து!

**குறிப்பு:-** இவ்வஞ்சல் அனைவருக்கும் பொதுவானதே! சமுத்திரவள்ளிக்கு மட்டும் உரியதல்ல!

**அன்பு**
**சித்தர்,**
14-7-89.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: சித்தரடியார் சோ.இரவீந்திரன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# இந்துமத மறுமலர்ச்சிக்காகப் பாடுபடுங்கள்!

ஓம்

தலைமைப்பீடம்,
25-1-89.

அருள்மிகு சித்தரடியான் Dr. V. நாகராசன் (விரகாலூர், இலால்குடி Tk, திருச்சி - 621722) அவர்களுக்கு குருவாணை பெற்று தலைமைப்பீடம் விடுக்கும் செயல்விளக்கத் திருவோலை.

1) அனைத்தும் குருவின் செயலே! தாத்தாக்கள் ஆத்தாக்கள் அம்மையப்பன்களின் திருவருளே!

2) தங்களின் 21-1-89 தேதியிட்ட உள்நாட்டஞ்சல் கிடைத்தது. விவரம் அறிந்தோம். குருதேவரிடம் படித்துக் காண்பிக்கப்பட்டது. குருதேவர் கூறிய விவரங்களை இங்கு குறிப்பிடுகின்றோம்.

3) தங்கள் ஊரைச் சுற்றியுள்ள சுமார் 15 அல்லது 20 மைல்களுக்குள் உள்ள கோயில்களின் விவரங்கள், அதன் வரலாறுகள், அக் கோயில்களில் பூசை செய்வது குருக்களா? பூசாறிகளா? அக் கோயில்களில் வாரவழிபாட்டு மன்றம் வைக்க முடியுமா? மெய்ஞ்ஞானக்கொடி ஏற்ற முடியுமா? கோயில்களில் இயலாது என்றால் வீட்டில் ஏற்ற இயலுமா? (ஒருவர் அல்லது இருவர் வீடுகளிலாவது) என்ற முழு விவரங்களை உடனடியாக ஆய்ந்து தலைமைப்பீடத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுகின்றோம்.

4) பெரிய கோயிலில் வார வழிபாடு என்பதை விட சிறிய கோயிலில் நடைபெறச் செய்யலாம். இருபது மைல்களுக்குள்ளும் விரகாலூரில் செவ்வாய்க்கிழமை யாகம் நடைபெறுகின்ற நாட்கள் தவிர பரவலாக அந்தந்த வட்டாரங்களில் ஆறுநாட்களிலும் ஆங்காங்கே யாகசாலை, வாரவழிபாடு நடத்த முடியுமா?

<u>**குறிப்பு**</u>:-

a) <u>செயல்முறை:-</u> ஏழை எளிய மக்களுக்கு 30 காசு செலவில் அச்சிட்ட சிவலிங்கம் வழங்கலாம். சிவலிங்கம் என்பது இந்துக்களுக்கு மட்டுமல்ல. ஆவி, ஆன்மா, ஆருயிர் சேர்ந்த வடிவம் என்பதை விளக்கமாகத் தரலாம். பாதிக்கப்பட்ட வீடுகளில் 4 அல்லது 8 படங்கள் ஒட்டலாம். மெய்ஞ்ஞானக்கொடியோ அல்லது திரைச்சீலையோ இயலாத வீட்டில் இதை ஒட்டலாம்.

b) தாங்கள் அறிந்த வகையில் கோயில்களில் அல்லது கோயில்களின் முன்பாக உள்ள கடைகளில் அச்சிட்ட சிவலிங்கம் பைசா 25க்கு தருவோம். அவர்கள் 30 பைசாவிற்கு விற்றுக் கொள்ளலாம். நமது நிர்வாகக் குழுவோ, இயக்கத்தவரோ இதை நூற்றுக்கணக்கில் வாங்கி விற்பதானால் 20 பைசா வீதம் தரப்படும். அவர்கள் 30 பைசாவிற்கு விற்றுக் கொள்ளலாம்.

c) குருதேவர் திருச்சியில் தங்கிக் கொண்டோ அல்லது விரகாலூரில் தங்கிக் கொண்டோ எல்லா இடங்களிலும் உள்ள ஏழை எளிய மக்களுக்கு ரூ11¼ முதல் ரூ.48 குருகாணிக்கை பெற்று அருட்கணிப்பு கணிப்பார். ஏற்பாடு செய்க. உடனே குருதேவர் வருவார்.

d) பரிகாரங்களில் முடிகயிறு, எந்திறம், சக்கரம், தாயத்து உடனுக்குடன் மக்களின் பொருளாதார நிலைக்கு வசூலிக்கக் கூறி, தொகையை தலைமைப்பீடம் அனுப்பிட கூறிவிட்டு வரலாம்.

e) அன்றாடம் ஏதேனும் ஒரு கோயிலில் பிரசங்கம், பேருரைகள் (குருதேவர்) வழங்க ஏற்பாடு செய்க. தமிழின் அடிப்படையில் இலக்கியங்கள் பற்றியோ, சமயத்தின் அடிப்படையிலோ சொற்பொழிவு நடத்த பள்ளிக் கூடங்களில், கல்வி நிறுவனங்களில் நிகழ்த்த ஏற்பாடு செய்க. தமிழின மொழி மத விடுதலை இயக்க அடிப்படையில் பேசவும் தயாராக உள்ளார். இதுபோல, குருதேவரை நன்கு அறிமுகப்படுத்த ஏற்பாடு செய்க.

f) இந்துமதத் தொடர்பாக உள்ள பூசாறிகள், குருக்கள், சாமியார்கள், அருளாளர்கள், சோதிடக்காரர்கள், கதை கூறுபவர்கள், தமிழ்ப் புலவர்கள், சிறந்த பத்தர்கள், ... முதலிய அனைவரையும் விரகாலூரை மையமாகக் கொண்டு இருபது மைல் சுற்றளவிற்கு ஒருவரையும் விடாமல் குருதேவருக்கு அறிமுகம் செய்து வைக்க வேண்டும். அதற்கு சொற்பொழிவும், அருளூறு குங்குமம், திருநீறு, மஞ்சள் முதலிய பூசனைப்பொருள்களும், அருளேற்றப்பட்ட முடிகயிறு தாயத்து சக்கரங்கள் முதலிய பொருள்களும், அச்சிட்ட அறிக்கைகளும், பூசை மந்திறங்களும் பயன்படும். தேவையானால் தனிமனிதர்களின் வீடுகளுக்கும் செல்கிறார் குருதேவர்.

5) இந்துமதத்தின் மீது பற்றுள்ள தாங்கள் இந்துமத மறுமலர்ச்சிக்காகப் பாடுபட வேண்டும். பதினெண்சித்தர்களின் மெய்யான இந்துமதம் மூடநம்பிக்கையற்றது; கண்மூடிப் பழக்க வழக்கமற்றது; புராண குப்பைகளை நம்பாதது; அனைத்திலும் பகுத்தறிவுப் போக்கினையும், மெய்ஞ்ஞானப் போக்கினையும் உடையது. மேலும், தமிழின மொழி மத வளவளர்ச்சிக்கும், விடுதலைக்கும் உரியது. இவற்றின் அடிப்படையில் சிந்தித்தும், பிறரைச் சிந்திக்க வைத்தும் செயல்படுங்கள். அப்பொழுதுதான் குருதேவரை வரவழைத்து அனைத்தையும் மிகச் சிறப்பாக செய்து முடிக்க முடியும்.

உடன் விரிவான பதில் எழுதுக.

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!

**அன்பு**

**தலைமைப்பீடத் திருவோலைநாயகம்,**

**கபாலீசுவரி சன்னிதானம் சீ.மணி, 25-1-89.**

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் கிடைத்தது.//**

# இந்த உண்மையை மறுக்க முடியுமா?

... ... இந்துக்களே ஒன்று திரளுங்கள் என்று கூக்குரல் போடுவதாலோ, இந்துக்களின் ஆட்சியை அமைப்போம் என்று கூக்குரல் போடுவதாலோ, மாற்று மதத்தவரை கண்மூடித்தனமாக பொதுமேடைகளில் திட்டுவதாலோ எந்தவிதமான நன்மையும் ஏற்பட்டு விடாது. இந்தியா விடுதலை பெற்று அரை நூற்றாண்டு காலத்திற்கு மேலாகியும் கூட பல்வேறு இந்துமதக் கட்சிகளால், இந்துமதத் தலைவர்களால்,

இந்துக்களை ஒன்றுதிரட்ட முடியவில்லை;

இந்துக்களை ஒற்றுமைப்படுத்த முடியவில்லை;

இந்துக்கள் மதம் மாறுவதைத் தடுக்க முடியவில்லை;

மாற்று மத மந்திரவாதிகளால் பாதிக்கப்பட்டு துன்பப்படுகின்ற இந்துக்களை நலப்படுத்த முடியவில்லை;

இந்துக்களில் கணிசமானவர்கள் வெளிப்படையாகவே மாற்று மதக் கோயில்களுக்குச் சென்று வழிபாடு செய்வதையும், காணிக்கை செலுத்துவதையும், மாற்று மதத்தவரிடம் மந்திரித்துக் கொண்டு தாயத்து, முடிகயிறு, சக்கரங்கள் வாங்குவதையும் தடுக்க முடியவில்லை, தடுக்க முடியவில்லை, தடுக்க முடியவில்லை, தடுக்க முடியவே இல்லை.

இதுதான் உண்மை, இதுதான் உண்மை, இதுதான் உண்மை. இன்றைக்கு இந்தியாவில் இந்துமதத்தின் பெயரால் உள்ள எந்த ஒரு அரசியல் கட்சியாலாவது அல்லது எந்த ஒரு இந்து சமயக் கட்சியாலாவது அல்லது எந்த ஒரு இந்துமதத் தலைவராலாவது இந்த உண்மையை மறுக்க முடியுமா? மறுக்க முடியுமா? மறுக்க முடியுமா? ... ...

**//1995இல் குருதேவரின் தலைமைப்பீடத்திலிருந்து கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த அறிமுகத்தார் ஒருவருக்கு எழுதப்பட்ட கடிதத்திலிருந்து எடுக்கப்பட்ட பகுதி.//**

**“இந்துக்கள் கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்”**

**-குருபாரம்பரிய வாசகம்.**







தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களின் (கி.பி.785 - 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam Trust,** (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://gurudevar.in
https://induism.org
https://books.gurudevar.org
https://gurudevar.org
Email: indhuism@gmail.com

காணிக்கை ரூ.10/-